நெடுகம்பட்டு போன்ற கிராமங்களுக்குப் பாசன வசதி செய்து கொடுக்க முன்னுரிமை எடுத்துக் கொண்டு, இந்தத் திட்டத்தை கூடிய விரைவிலே நிறைவேற்ற அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, 14 ஏரிகளுக்குத் தண்ணீரை வழங்குகின்ற இந்தத் திட்டத்தைத் தல அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டுமென்ற உத்தரவினை இந்த அரசு போட்டது. அந்த உத்தரவின் அடிப்படையிலே, மேலெழுந்தவாரியாக ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டு, சுமார் ரூ. 53.58 இலட்சம் செலவில், அந்தத் திட்டத்தை மேற்கொள்ள முடியும் என்ற கருத்தினை இந்த அரசுக்குத் தல அதிகாரிகள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகுதான், அதனால் எவ்வளவு தூரத்திற்கு நிலங்கள் பயனடையும் என்பதையெல்லாம் பார்த்து, அந்தப் பயனுக்கு ஆகும் செலவு விகிதம், பயன் பெறும் பரப்பு போன்றவைகளை ஆய்வு செய்த பிறகுதான், மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்க முடியும். அந்தப் பணிதான் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

திருமுட்டம் பகுதியை ஒன்றியமாக்கல்

குறுகிய கால வினா எண் 8—(* வினா எண். 9124) திரு. சா. ஜெயச்சந்திரன், கே. ஆர். கணபதி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம் காட்டுமன்னார் கோவில் ஊராட்சி ஒன்றியம், கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியம் இரண்டையும் உள்ளடக்கிய திருமுட்டம் பகுதியை தனியாக பிரித்து ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமுல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) மற்றும் (ஆ) திருமுட்டம் பகுதிக்கெனத் தனியான ஊராட்சி ஒன்றியத்தை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

1986 மே 2]

திரு. சா. ஜெயச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோவில் ஊராட்சி ஒன்றியம், கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியம் என்ற இந்த இரண்டு ஊராட்சி ஒன்றியங்களின் அலுவலகத்திலேயிருந்து சுமார் 35, 40 கிலோ மீட்டர் தூரத்திலே திருமுட்டம் இருக்கிறது. காட்டுமன்னார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் அந்தப் பகுதியில் சுமார் 16 கிராமப் பஞ்சாயத்துக்களும், கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் அந்தப் பகுதியில் சுமார் 12 கிராமப் பஞ்சாயத்துக்களும் உள்ளன. சுமார் 35 மற்றும் 40 கிலோ மீட்டர் தூரத்திலேயுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு கிராமப் பஞ்சாயத்துக்களிலே உள்ள ஊராட்சி மன்றத் தலைவர்களும், கிராமப் பகுதியிலே உள்ள பொதுமக்களும் சென்று அன்றாடம் கவனிக்க வேண்டிய பணிகளைக் கவனிக்க முடியவில்லை. அதிகாரிகளுக்கும் மிகவும் சிரமமாக இருக்கிறது. இது சம்பந்தமாக, கடந்த வருடமே, சட்டமன்ற உறுப்பினர்களால் பேசப்பட்டது. ஆகவே, இதையெல்லாம் கருத்திலே கொண்டு, தமிழக அரசு, திருமுட்டம் பகுதியைத் தனியாகப் பிரித்து, ஊராட்சி ஒன்றியம் அமைக்க இனிமேலாவது முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

(மாலை 4-50)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத் தேர்தல்கள் எல்லாம் சமீபத்திலே நடந்து முடிந்து இருக்கின்றன. இப்பொழுது பிரிப்பது என்று சொன்னால் சங்கடங்கள் ஏற்படக் கூடும். ஒரு ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமானால், அந்த ஊராட்சி ஒன்றியம் அதற்குத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். அதற்குப் பிறகு மாவட்ட மன்றம் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். அதற்குப் பிறகு அரசு அதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். இப்பொழுதுதான் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்த நிலையில் எந்த ஒரு ஊராட்சியிலாவது அப்படி பிரிக்க வேண்டுமென்று கருதி அப்படி பிரிப்பதற்கு ஏகமனதாக ஒரு தீர்மானத்தை

[1986 மே 2

நிறைவேற்றி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் நிறைவேற்றியிருப்பார்களானால் உள்ளபடியே அப்படி பெரிதாக இருக்குமானால் அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. கே. ஆர். கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தற்போது பிரிக்க முடியாது என்று சொன்னார்கள். கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியம் சுமார் 63 ஊராட்சி மன்றங்களையும், காட்டுமன்னார்கோவில் ஊராட்சி ஒன்றியம் சுமார் 58 ஊராட்சி மன்றங்களையும் பெற்றிருக்கிறது. ஆகவே நிதி ஒதுக்குகின்ற போது என்.ஆர்.பி. திட்டமாக இருந்தாலும், ஆர்.எல்.ஈ.ஜி.பி. திட்டமாக இருந்தாலும் பெரிய ஊராட்சியாக இருந்தாலும், சிறிய ஊராட்சியாக இருந்தாலும் சமமாக பிரிக்கப்படாத காரணத்தினால் அதற்கு கிடைக்கக்கூடிய நியாயமான பங்குத் தொகை கிடைக்கவில்லை என்றும், மேலும் பின்தங்கிய பகுதியாகிய திருமுட்டம் இருப்பதால் மாண்புமிகு உறுப்பினர் ஜெயச்சந்திரன் சொல்லியதுபோல் ஊராட்சி ஒன்றியத் தலைவரோ, பொதுமக்களோ ஒன்றியத்திற்கு வருகின்றபோது சுமார் 40, 50 கிலோமீட்டர் தூரத்திற்கு வரவேண்டியிருப்பதால் மீண்டும் உள்ளாட்சி தேர்தல் வருவதற்குள் பிரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் ஊராட்சித் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது என்ற விவரத்தைச் சொன்னேன். மீண்டும் தேர்தல் நடப்பதற்கு இன்னும் 3 ஆண்டு காலம் இருக்கின்றது. அப்பொழுது அதைப் பற்றி பரிசீலிக்கலாம். இப்பொழுது அதைப் பற்றி பதில் சொல்வதற்கில்லை.

திரு. கே. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து தேர்தலுக்கு முன்பாகவே பெரிய ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாக பிரிக்க வேண்டுமென்று மாவட்ட வளர்ச்சி கவுன்சில் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதனுடைய நிலை யாது? ஓமலூர் 35 பஞ்சாயத்துக்களை அடக்கியது. அதனை

1986 மே 2]

இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சேலம் மாவட்ட வளர்ச்சி கவுன்சில் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனுப்பப் பட்டிருக்கிறது. அதனுடைய நிலை யாது?, அப்படி பிரிக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய தேர்தலுக்கு முன்பு சில ஊராட்சி ஒன்றியங்களை பிரிக்கலாம் என்ற யோசனை சொல்லப்பட்டது. அதிலே ஓமலூர் இடம் பெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்புகள்

(அ) இலங்கைக்கும் தனுஷ்கோடிக்கும் இடையிலுள்ள மணல் திட்டில் கடத்தல்காரர்கள் சிலர் சுட்டுக் கொல்லப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவருக்கு பதிலாக திரு. தி. அன்பழகன் அவர்கள் மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனுஷ்கோடி அருகேயுள்ள 6-வது மணல்திட்டு என்ற இடத்தில் சமீபத்தில் இலங்கைப் படையினரால் தமிழ் நாட்டைச் சேர்ந்த 6 பேர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப் பட்டது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.